


உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொப்பம்பட்டியில் 11,816 பயனாளிகளுக்கு ரூ.117.85 கோடி மதிப்பிலான அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, , திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் நகர்மன்றத் தலைவர் க.திருமலைச்சாமி, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் கா.பொன்ராஜ்,கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் கோ.காந்திநாதன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.இராமகிருஷ்ணன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர்நா.சரவணன் உட்பட பலர் உள்ளனர்.

### நாளை (30ம் தேதி) பசும்பொன் வருகை தரும்

# முதல்வருக்கு சிவகங்கை மாவட்டம் - திருப்புவனத்தில் வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக். 29-

நாளை (30ஆம் தேதி) பசும்பொன் தேவர் நினைவிடத்திற்கு மரியாதை செலுத்த வருகை தரும் முதல்வருக்கு சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் திருப்புவனத்தில் வரவேற்பு தரப்படுகிறது.

இதுகுறித்து சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (30ஆம் தேதி) ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடைபெறும் முத்துராமலிங்கத் தேவர் குருபூஜை விழாவில் கலந்து கொண்டு மரியாதை செலுத்துகிறார். இதற்காக கார் மூலம் காலையில் மதுரையில் இருந்து பசும்பொன் செல்லும் வழியில் முதல்வருக்கு சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்ட எல்கையான திருப்புவனம் மின்சார அலுவலகம் எதிரில்காலை 8.00மணிக்கு எனது தலைமையில் (கே.ஆர். பெரிய கருப்பன்) சிறப்பான வரவேற்பு தரப்பட உள்ளது. எனவே இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு முதல்வரை வரவேற்க வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறேன் .

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### காளையார் கோவிலில் மாமன்னர்

# மருதுபாண்டியர்கள் 222வது ஆண்டு நினைவு நாள்!

## பொன். முத்துராமலிங்கம் - பவானி ராஜேந்திரன் மரியாதை!

சிவகங்கை, அக். 29 -

சிவகங்கையை ஆட்சி புரிந்த மாமன்னர் மருது பாண்டியர்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக ஆங்கிலேயர்களை முதலில் எதிர்த்துப் போராடியதற்காக தூக்கிடப்பட்டார்கள். அவர்களது தலைமட்டும் 221ஆண்டுகளுக்கு முன்பாக அக்டோபர் 27ஆம் தேதி காளையார் கோவிலில் சொர்ணகளீஸ் வரர் ஆலயம் முன்பாக அவர்களது வேண்டுகோளின்படி அடக்கம் செய்யப்பட்டது. அவர்களது வீரமிக்க செயலினை பாராட் டும் வகையில் ஆண்டுதோறும் அவர்களது நினைவிடத்தில் பல்வேறு அரசியல் கட்சியினர் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள் நினைவு நாளில் மரியாதை செலுத்தி வருகிறார்கள்.

இந்த ஆண்டு 222 வது நினைவு நாள் நேற்றுமுன்தினம் 27ஆம் தேதி அனுசரிக்கப்பட்டது. காலையில் மதுரை ஆதீனம் யாகங்கள் சிறப்பு பூஜைகளை நடத்தி வைத்தார். தொடர்ந்து மருது பாண்டியர் மக்கள் நலகூட்டமைப்பின் சார்பில் 500க்கும் மேற்பட்ட பெண்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக மருது பாண்டியர் நினைவிடத்திற்கு வந்தார்கள். அதை தொடர்ந்து பாலாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நினைவிடத்தில் பல்வேறு அரசியல் கட்சியினர் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், திருமதி பவானி ராஜேந்திரன் முன்னாள் எம்.பி. ஒன்றியச் செயலாளர்கள் யோக.கிருஷ்ண குமார் வே.ஆரோக்கிய சாமி, எம்.ஜெயராமன் சிவகங்கை நகர் கழக செயலாளர்துரைஆனந்த், நிர்வாகிகள் அயூப்கான் வீனஸ்ராமநாதன், காந்தி கார்த்திகேயன், மாவட்ட மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், ராஜேஸ்வரி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து, இளைஞரணி அரிகரன், மாணவரணி ரமேஸ், இளைஞரணி சரவணன் துரைகண்ணன், குண்டுமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சிம்மத்தில் போஸ்,முனியசாமி, ஒன்றியச் செயலாளர்கள் முத்துப்பாண்டி, பால்பாண்டி, புகழேந்தி, காங்கிரஸ், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ., மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி, பொதுக்குழு உறுப்பினர் உச்சநீதி மன்ற வழக்கறிஞர் இ.எம். எஸ். ஜெயசிம்மன், டி. கணேசன், சன்னாசி, மலைச்சாமி அ.சிதம்பரம், எம்.ராஜரத்தினம்,

ம.தி.மு.க. மாவட்டப் பொருளாளர் சார்லஸ் ஒன்றியச் செயலாளர் வீரையா மற்றும் பல்வேறு அமைப்பினை சேர்ந்தவர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். மூவேந்தர் கழகம் மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பில் அன்னதானங்கள் வழங்கப்பட்டது. மருது பாண்டியர் நினைவு நாளை முன்னிட்டு ராமநாதபுரம் சரக டி.ஐ.ஜி. எம்.துரை தலைமையில் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் தலைமையில் 2000க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

சிவகங்கை, கல்லல் காளையார்கோவில், இளையான்குடி, மானாமதுரை, திருப்புவனம், நாட்டரசன் கோட்டை ஆகிய ஊர்களில் வாகன சோதனைச் சாவடிகள் சி.சி.டி.வி. கேமராவுடன் அமைக்கப்பட்டிருந்தது. தவிர 30க்கும் மேற்பட்ட ரோந்து வாகனங்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். பாதுகாப்பு பணியில் திருவாரூர், திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல் உட்பட பல்வேறு மாவட்டங்களிலிருந்து போலீசார் பாதுகாப்பு பணிகளுக்காக வரவழைக்கப்பட்டிருந்தார்கள்.

### பெரம்பூர் தெற்குப் பகுதி தி.மு.க. சார்பில்

# 45வது வட்டத்தில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

## த.இளைய அருணா - கலாநிதி வீராசாமி - ஆர்.டி.சேகர் பங்கேற்பு! ஜி.மாரிமுத்து தலைமை!

சென்னை, அக்.29

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 45-வது வட்ட தி.மு.க. சார்பாக நீட் விலக்கு, நம் இலக்கு, எனும் மாபெரும் கையெழுத்து இயக்க நிகழ்வு இன்று (29.10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் 45வது வட்டத்தில் அமைந்துள்ள பி.வி.காலனி ரவுண்டானாவில் நடைபெறுகிறது.

அது சமயம் இந்நிகழ்ச்சி தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. கருணாநிதி மற்றும் பெரம்பூர் தெற்கு பகுதி செயலாளர் க.ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில். 45-வது வட்ட கழக செயலாளர் ஜி.மாரிமுத்து தலைமையில் நடைபெறுகிறது.

சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா. இளைய அருணா நிகழ்ச்சியை துவக்கி வைக்கின்றார்.

அது சமயம் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா. நரேந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.தமிழ்செல்வன், க. அமுல், டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் BLA_2 மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



நீட் விலக்கு நம் இலக்கு எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் முகாம் சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மையில் நல உரிமை பிரிவு சார்பில் பெரம்பூர் தெற்கு பகுதி 36 வது வட்டத்தில் எத்திராஜ் சாமி சாலையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மாளிகை அருகில் சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எம்.டி.ஆர்.அப்துல் ரஹ்மான் தலைமையில் மற்றும் டி.அசோக் ராஜ் மாவட்ட துணைத் தலைவர் துணை அமைப்பாளர்கள் எஸ் .மகிமை தாஸ் எஸ் . எம் .அப்துல் ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மற்றும் பெரம்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் அ .முருகன், மாவட்ட கழக துணைச் செயலாளர் மு.கோபி, பொதுக்குழு உறுப்பினர் நா.சண்முகம், வட்டக் கழக செயலாளர்கள் க.பாபு ஜி.மாரிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் செங்குன்றம் பேரூர் 11 வது வார்டு தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, நாரவாரி குப்பம் (செங்குன்றம்) பேரூராட்சி துணைத் தலைவரும், சென்னை வடகிழக்கு மாவட்ட பிரதிநிதியுமான ஆர்.இஆர். விப்ர நாராயணன் தலைமையில் 1000 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ் சுதர்சனம் கலந்து கொண்டு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் செங்குன்றம் 11 வது வார்டு செயலாளர் ஆர்.இஆர். சூரிய நாராயணன் அனைவரையும் வரவேற்றார். செங்குன்றம் நகரச் செயலாளர் ஜி.ராஜேந்திரன், புழல் ஒன்றிய செயலாளர் பெ.சரவணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஜெயமதன், நாரவாரிகுப்பம் பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார், நாரவாரிகுப்பம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் இரா.ஏ.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# இராணிப்பேட்டை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி வேண்டுகோள்!

இராணிப்பேட்டை, அக். 29-

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக் கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்கள் அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும்

வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் -வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், ஒன்றிய, நகர, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர்கள் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஆர்.இ.ஆர். விப்ர நாராயணன் தலைமையில்

# செங்குன்றம் பேரூர் தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் நல உதவிகள் வழங்கினார்!

மாதவரம், அக்.29

சென்னை வடகிழக்கு மாவட்டம் செங்குன்றம் பேரூர் 11 வது வார்டு தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா, நாரவாரி குப்பம் (செங்குன்றம்) பேரூராட்சி துணைத் தலைவரும், சென்னை வடகிழக்கு மாவட்ட பிரதிநிதியுமான ஆர்.இஆர். விப்ர நாராயணன் தலைமையில் 1000 பேருக்கு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ் சுதர்சனம் கலந்து கொண்டு அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்வில் செங்குன்றம் 11 வது வார்டு செயலாளர் ஆர்.இஆர். சூரிய நாராயணன் அனைவரையும் வரவேற்றார். செங்குன்றம் நகரச் செயலாளர் ஜி. ராஜேந்திரன், புழல் ஒன்றிய செயலாளர் பெ.சரவணன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ. ஜெயமதன், நாரவாரிகுப்பம் பேரூராட்சி தலைவர் தமிழரசி குமார், நாரவாரி குப்பம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் இரா.ஏ.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். அவை தலைவர் அருள் தேவனேசன், செங்குன்றம் நகரத் துணைச் செயலாளர்கள் கே.கபிலன், முனீஸ்வரி சுகுமார், பொருளாளர் சந்திரசேகர், மாவட்ட பிரதிநிதி ஆர்.டி. சுரேந்தர், ஒன்றிய பிரதிநிதிகள் என்.எம்.டி. இளங்கோவன், ஆர். எம்.பி குமார்,

பி.அன்பு, செங்குன்றம் 11 வது வார்டு திமுக நிர்வாகிகள் இசைவாணன் காஜா, லதா கோபி, மதன், இந்திர குமார், கோடீஸ்வரன், தேவிமுருகன், நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். டி.குமார், ஆதிதிராவிட அணி அமைப்பாளர் சி. ஏழுமலை, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ரகுகுமார், மாவட்ட சிறுபான்மை பிரிவு அணி துணை அமைப்பாளர் காஜா மொய்தீன், நீதி ராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வார்டு துணை செயலாளர்கள் வி.வேலு, சி.முருகன் ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்.

### தலைமை ந. இராமலிங்கம்! முன்னிலை ச.பரமசிவம்!

# அண்ணாநகர் தொகுதி பாகமுகவர்கள் (BLA2) கூட்டம்!

## நே.சிற்றரசு - தயாநிதி மாறன் எம்.பி. - எம்.கே.மோகன்- காசிமுத்துமாணிக்கம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, அக். 29 -

கழக தலைவர் முதல்வர் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அண்ணாநகர் சட்டமன்ற தொகுதியின் பாகமுகவர்கள் (BLA2) கூட்டம் இன்று (29102023 ஞாயிறு) மாலை 4 மணிக்கு G.G. மஹால், எம்.எம்.டி.ஏ. காலனி (பஸ் டிப்போ பின்புறம்) நடைபெறுகிறது.

இக்கூட்டம் அண்ணா நகர் தெற்கு செயலாளர் , சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் ந. இராமலிங்கம் தலைமையில், அண்ணா நகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம் முன்னிலையில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி., அண்ணாநகர் சட்ட மன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், தொகுதி பொறுப்பாளர் கவிஞர் காசிமுத்து மாணிக்கம், தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்த ஆலோசனை கூட்டத்திற்கு மாவட்ட நிர்வாகிகள் அண்ணாநகர் தெற்கு வடக்கு பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் பாகமுகவர்கள் (BLA2) மட்டும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அண்ணா நகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் கேட்டு கொள்கிறார்.

### பெரம்பூர் தெற்கு பகுதி

# 36 அ வட்டத்தில் நீட் விலக்கு கையெழுத்து இயக்க கூட்டம்!

## தா.இளைய அருணா தொடங்கி வைத்தார்! எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான் தலைமை!

சென்னை, அக்.29-

நீட் விலக்கு நம் இலக்கு எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தின் முகாம் சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மை நலப் உரிமை பிரிவு சார்பில் பெரம்பூர் தெற்கு பகுதி 36அ வது வட்டத்தில் எத்திராஜ் சாமி சாலையில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் திருமண மாளிகை அருகில் சென்னை வடக்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எம்.ஆர். டி.அப்துல் ரஹ்மான் தலைமையில் மற்றும் டி.அசோக் ராஜ் மாவட்டத் துணைத் தலைவர் துணை அமைப்பாளர்கள் எஸ்.மகிமை தாஸ், எஸ்.எம்.அப்துல் ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழகச் செயலாளர் தா.இளைய அருணா தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.கருணாநிதி மற்றும் பெரம்பூர் வடக்கு பகுதி கழக செயலாளர் அ.முருகன், மாவட்ட கழக துணைச் செயலாளர் மு. கோபி பொதுக்குழு உறுப்பினர் நா.சண்முகம், வட்டக் கழக செயலாளர்கள் க.பாபு ஜி.மாரிமுத்து, என்.கார்த்திபன் இரா.ஹரிதாஸ் சி.எஸ். ரவி அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கூல் பாயிண்ட் பி.பிரகாஷ், கே.கலையரசன், பகுதி கழக நிர்வாகிகள் பி.செல்வ ராஜ், அ.ஜியா, இரா.லீலா வேலு, செந்தூரப் பாண்டியன், எம்.லதா,

மாவட்ட பிரதிநிதிகள் ச.சச்சிதானந்தம், புல்லட் எஸ். செபஸ்டியன், சையது அலிகான் துணை தலைவர்கள் டி.வளன்ராஜ், சிந்தாமணி அ.பாஸ்கரன், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் கோ.விஜய், அ.அமலநாதன் எம்.பிரேம குமார் முத்துராமன் எஸ்.ஆர்.கணேஷ் கோமதி பொற்செழியன், எஸ்.எம். அப்துல்லா வட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஒய்லர், அவைத்தலைவர் க.அரிமூர்த்தி, ஆர். கே.எஸ்.எம். தம்பையா, காசி பொற்செழியன் இளைஞர் அணி துணை அமைப்பாளர் நா. பாஸ்கர்,

பகுதி பிரதிநிதிகள் சந்திரன் ஓம்.டீலர்.சுரேஷ் ஜி. கணேஷ், எ.சந்திரன், மரிய ராஜா பாக்யராஜ் எம்.உதய பானு மற்றும் கழகச் செயல் வீரர்கள் டி.தினகரன், ஜி கணேஷ், ஜெ.சுரேஷ் எஸ் வந்தராவ் ஜீவன் குமார் பயஸ் பிரபு ஸ்டீபன் ராஜ் கார்த்திக் குமரன் மற்ற கழக உடன்பிறப்புகள் மாணவச் செல்வங்கள் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.